(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

NFWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| **கிறிஸ்தவ நாகரிகம்**<br>**Christian Civilization** | **Three Hours**<br>**Gr -12 (2024)** | **49** | **T** | **I,II** |

### பகுதி – I

❖ **மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

01.கி.மு 5000 ஆண்டுகளில் வளர்ச்சி பெற்ற நாகரிகங்கள்
1) சிந்து வெளி நாகரிகம், அசீரிய நாகரிகம்
2) எகிப்திய நாகரிகம், மொசப்பத்தேமிய நாகரிகம்
3) கிரேக்க நாகரிகம், உரோமைய நாகரிகம்
4) பாரசீக நாகரிகம், அசீரிய நாகரிகம்
5) கிரேக்க நாகரிகம், அசீரிய நாகரிகம்

02. மனிதன் தன் உடல் உள இயல்புகளை, திறமைகளைப் பண்படுத்தி, வளப்படுத்தி, வளர்ச்சியுறச் செய்ய எடுக்கும் அனைத்து முயற்சிகளும் பண்பாடு என்க்கூறிய சங்கம்.
1) நிசேயா சங்கம் 2) 1ம் வத்திக்கன் சங்கம் 3) 2ம் வத்திக்கன் சங்கம்
4) திரிதெந்தின் பொதுச்சங்கம் 5) எபேசு சங்கம்

03. சிகுராத் என்னும் பிரமாண்டமான கட்டடம் காணப்படும் இடம்
1) ஊர் 2) நிப்ர் 3) இரிடு 4) உருக் 5) லாகாஸ்

04. ஆபிரிக்காவில் விக்டோரியா ஏரியில் ஆரம்பித்து மத்தியரைக்கடலில் சங்கமமாகும் நதி
1) யோர்தான் 2) நைல் நதி 3) சிந்து நதி 4) யூப்பிரிட்டீஸ்நதி5) தைகிறிஸ் நதி

05. எகிப்தில் இருந்து புறப்பட்ட இஸ்ராயேல் மக்கள் யாருடைய தலைமையில் கானான் நாட்டை அடைந்தனர்.
1) மோசே 2) ஆரோன் 3) லேவி 4) யோசுவா 5) கெதயோன்

• **பின்வரும் விடயங்களை அவதானித்து விடை தருக.**

A. நொஸ்திக்கம் B. பிளற்றோனிசெம்
C. ஸ்தொயிக்கம் D. அரிஸ்ரோட்டில் காரணகாரிய கொள்கை

06. உலகில் நிகழும் எல்லாச் செயற்பாடுகளையும் நான்கு வகையான காரணகாரிய தொடர்புக்குள் உள்ளடக்கும் சிந்தனை
1) A 2) B 3) C 4) D 5) யாவும் சரி

07. எந்தச் சூழ்நிலையிலும் சமநிலையுடன் இன்பத்தையும் துன்பத்தையும் ஏற்கும் தன்மையை வெளிப்படுத்தும் சிந்தனை
1) AB 2) D 3) CD 4) B 5) C

08. கி.பி 4ம் நூற்றாண்டில் உரோமைப் பேரரசின் வீழ்ச்சிக்கு பிரதான காரணம்
1) கிரேக்க படையெடுப்பு 2) உரோமைக் கலாபனை
3) சிலுவைப் போர் 4) நாகரிகம் அடையாத மக்களின் படையெடுப்பு
5) துருக்கியர்களின் படையெடுப்பு

09. திரிதெந்தின் சங்கம் கூட்டப்பட்ட காலப்பகுதி
1) கி.பி 1540 2) கி.பி 1346 3) கி.பி 1646 4) கி.பி 1463 5) 1546



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

10. கிரேக்கர்கள் கானான் நாட்டை எவ்வாறு அழைத்தனர்.
   1) பலஸ்தீனா
   2) இஸ்ராயேல் நாடு
   3) புனித நாடு
   4) பாலும் தேனும் பொழியும் நாடு
   5) வாக்களிக்கப்பட்ட நாடு

- பின்வரும் விடயங்களை அவதானித்து பொருத்தமான விடை தருக.
  A. ஆக்கோ சமவெளி
  B. சாரோன் சமவெளி
  C. செப்போலா சமவெளி
  D. எஸ்திரலோன் சமவெளி
  E. பெலிஸ்திய சமவெளி

11. மக்கபேயருக்கும் கிரேக்கருக்கும் யுத்தம் நடைபெற்ற இடம்
   1) A 2) B 3) C 4) D 5) E

12. நவீன நகரான ரெல் - அவிவ் காணப்படும் சமவெளி
   1) A 2) B 3) C 4) D 5) E

13. பெத்தானியாவில் இடம் பெற்ற நிகழ்வைக் குறிப்பது.
   1) யோசுவா தனது இறுதி அறிவுரையை மக்களுக்கு ஆற்றினார்.
   2) கொன்சன்ரைன் மன்னன் இங்கு பெரிய ஆலயத்தை கட்டினான்.
   3) இயேசு இங்கு பலமுறை சென்று செபித்தார்.
   4) இயேசு உணவு, அருந்தும் போது அவரது காலடிகளை பாவிப் பெண்ணொருவர் நறுமணதைலத்தால் பூசினாள்.
   5) தாவீது மன்னன் இங்கு தான் முடி சூட்டப்பட்டார்.

14. யோசோப்பின் காலத்தில் எகிப்தில் குடியேறிய யாக்கோபுக்கும் அவரது குடும்பத்திற்கும் கொடுக்கப்பட்ட பகுதி
   1) மிதியான் 2) கானான் 3) கோசேன் 4) கெபிரோன் 5) மம்பிறே

15. ஏழு ஆண்டுகளாக இஸ்ராயேல் மக்களை துன்புறுத்திய நியானியரைத் தோற்கடித்து அவர்களைப் பாதுகாத்த நீதிதலைவர்
   1) கிதியோன் 2) சிம்சோன் 3) தெபோரா 4) சாமுவேல் 5) யோசுவா

16. அமலேக்கியருடனான போரில் அமலேக்கிய அரசன் ஆகாயையும் நல்ல பொருட்களையும் பாதுகாத்து கடவுளின் கட்டளையை மீறிய அரசன்.
   1) தாவீது 2) சாலமோன் 3) ரெகபேயாம் 4) எரோபோவம் 5) சவுல்

17. சாலமோன் அரசன் இறைவனின் கோபத்திற்கு ஆளாகியமைக்கான பிரதான காரணம்
   1) வரிச்சுமை விதித்தமை
   2) மக்களை துன்புறுத்தியமை
   3) யாவேயை மறந்து அந்நிய தெய்வங்களை வழிபட்டமை
   4) வேலையாட்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைத்தமை
   5) பிரமாண்டமான கட்டடங்கள் கட்டியமை

18. அசீரியர்கள் வட அரசைக் கைப்பற்றிய காலப்பகுதி
   1) கி.மு 922 2) கி.பி 922 3) கி.மு 742 4) கி.பி 722 5) கி.மு 722

19. தென்னரசு யூதர்களை பபிலோனியாவுக்கு நாடுகடத்திய அரசர் யார்?
   1) ஆகாசு 2) நெபுக்கத்நேசர் 3) சைரஸ் 4) மகாஅலெக்சண்டர் 5) அமட்சியா

20. கி.மு 333 இல் மகா அலெக்சாண்டரால் தோற்கடிக்கப்பட்ட பாரசிக மன்னன்.
   1) சைரஸ் 2) அந்தியோக்கு எப்பிபானுஸ் 3) தாலமி
   4) 3ம் தாரியுஸ் 5) பொம்பே

(20 x 1 = 20 புள்ளிகள்)



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

❖ **பகுதி (அ) இல் இரண்டு வினாக்களையும் பகுதி (ஆ) இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக**

### பகுதி "அ"

01. 1) கிறிஸ்துவின் வாழ்க்கையிலும் போதனையிலும் மிளிர்ந்த விழுமியப் பண்புகள் நான்கினைத் தருக? *(2 புள்ளிகள்)*
    2) இஸ்ராயேலரை ஆட்சி செய்த அரசுகள் நான்கினைக் குறிப்பிடுக? *(4 புள்ளிகள்)*
    3) நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலான வேற்றுமைகளைக் குறிப்பிடுக? *(6 புள்ளிகள்)*
    4) மொசப்பத்தேமிய நாகரிகத்தின் சிறப்பம்சங்களை பட்டியற்படுத்துக? *(8 புள்ளிகள்)*

02. 1) ஆரம்ப கால திருச்சபைத் தந்தையர்களைக் குறிப்பிடுக? *(2 புள்ளிகள்)*
    2) கிறிஸ்தவ நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய யூத நாகரிகத்தின் சிறப்பம்சங்கள் நான்கினைத் தருக? *(4 புள்ளிகள்)*
    3) நொஸ்திக்கர்கள் முன்வைக்கும் கடவுள் பற்றிய மெய்யியல் சிந்தனைகளைக் குறிப்பிடுக? *(6 புள்ளிகள்)*
    4) இலத்தீன் மொழியில் திருவிவிலிய மொழி பெயர்ப்புப் பற்றி கலந்துரையாடுக? *(8 புள்ளிகள்)*

03. 1) யூதேயாவில் முக்கியம் பெறும் இடர்களைக் குறிப்பிடுக? *(2 புள்ளிகள்)*
    2) சமாரியா பகுதியில் முக்கியம் பெறும் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள் நான்கினைக் குறிப்பிடுக? *(4 புள்ளிகள்)*
    3) கிறிஸ்தவ வழிபாட்டில் தாக்கம் செலுத்திய உரோமைய வழிபாட்டு முறைகளைக் குறிப்பிடுக? *(6 புள்ளிகள்)*
    4) யூத சமய சமூக கலாசார மறுமலர்ச்சியில் எஸ்ராவின் பங்களிப்பு பற்றி கலந்துரையாடுக? *(8 புள்ளிகள்)*

### பகுதி "ஆ"

04. அ) கிரேக்க நாகரிகத்தின் சிறப்பம்சங்களை விபரிக்குக? *(10 புள்ளிகள்)*

    ஆ) திருவிவிலிய மொழி பெயர்ப்பில் கிரேக்க மொழி எத்தகைய செல்வாக்கினை செலுத்தியுள்ளது என்பது பற்றி கலந்துரையாடுக? *(10 புள்ளிகள்)*

05. அ) யூத நாகரிகம் பல நாகரிகளின் தாக்கங்களுக்கு உட்பட்டு வளர்ச்சியடைந்த நாகரிகமாகும் விளக்குக? *(10 புள்ளிகள்)*

    ஆ) இன்றைய கால கட்டத்தில் சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளுக்கான முக்கிய காரணிகளை குறிப்பிட்டு விளக்குக? *(10 புள்ளிகள்)*



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

06. அ) தாவீது அரசனின் ஆட்சிக்காலம் இஸ்ராயேல் வரலாற்றில் சிறப்பான காலமாகும் ஆராய்க? (10 புள்ளிகள்)

ஆ) ஒரு அரசு சிறப்பான முறையில் மக்களை ஆட்சி செய்ய வேண்டும் அப்போது தான் நாடு முன்னேற்றமடையும் இது பற்றிய உமது கருத்துக்களை முன்வைக்குக? (10 புள்ளிகள்)

07. அ) இஸ்ராயேல் வரலாற்றில் நிதித்தலைவர்களின் பங்களிப்பினை விளக்குக? (10 புள்ளிகள்)

ஆ) இஸ்ராயேல் மக்கள் மத்தியில் நீதித்தலைவர்களின் வழி நடத்தலில் காணப்பட்ட குறைபாடே அரசாட்சி உருவாக காரணமாகியது விளக்குக? (10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk